# விலைக்கேள்விக்கானகோரல்

# கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு- வடமாகாணம்.

1. தலைவர், ஆளுனர் பெறுகைக்குழு சார்பாக மாகாண அமைச்சு, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.

2. குறித்த இக்குத்தகை அடிப்படையிலான வேலைத்திட்டமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் அமைந்துள்ள பாடசாலைகளின் கூரை மீது சூரிய மின்சக்தி உற்பத்தி செயன்முறையின் போது அதற்கான நிதி பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி, உரிமை, அகற்றுதல் ஆகியவற்றிற்கான செலவீனங்களை உள்ளடங்கியுள்ளது இது தொடர்பான மேலதிக தகவல்கள் வடக்குமாகாணத்தின் ஏல ஆவணத்தின் Section 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த குத்தகை அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை இலங்கை மின்சார சபையின் திட்டம் 3இல் Netplus திட்டத்தின் ஊடாக மின்சார சபையுடன் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கான முழுக்கொடுப்பனவையும் இலங்கை மின்சார சபை ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் இலங்கை அரசாங்கத்தின் " soorya Bala Sangramaya" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைக்கும் வருமானத்தின். ஒரு பகுதியை (வருவாய்பங்கு) குத்தகைகாரருக்கு வழங்கவேண்டும்

3. இக்குத்தகையின் காலம் 20 வருடமாக இருக்கும்.

4. இந்தக் காலத்திற்கான குறைந்தபட்ச எதிர்பார்க்கப்பட்ட மொத்த வருவாய் பங்கு 382.75 மில்லியன் ஆகும்.

5. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

6. விலைக் கேள்வியாளர்கள் **இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் சூரியகல சேவை வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்டிருப்பதுடன்** கறுப்புப் பட்டியலில் பெயர் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும்.

7. தகமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 1 இல் மற்றும் பகுதி 5 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது..

8. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள்,கீழே **9ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **4.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனைசெய்யலாம்.

9. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **மாகாணக் கல்வி அமைச்சு,வடக்குமாகாணம், செம்மணிவீதி,நல்லூர் (தொலைபேசி இல: 021-221 9259, தொலைநகல் 021-222-0794 எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப3.00 மணிவரையில் சமர்ப்பித்து** கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

10. விலைக்கேள்விகள் (மூலம்,பிரதி) கீழேஅட்டவணையில் குறிப்பிடப்பட்டதிகதியில் **மு.ப10.30** மணிக்கு அல்லது **அதற்கு முன்னர் செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் வடமாகாணம், செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும்.கேள்விதாரர்கள் வேலைக்கானகேள்விஅடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.

11. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் **செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு , வடமாகாணம், செம்மணிவீதி, நல்லூர் என்னும்** முகவரியில் **மு.ப10.30** மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் நடைபெறும்.

12. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்விஆவணம் வழங்கும்/பெற்றுக்கொள்ளும் காலம் | **16.06.2021** முதல் **27.07.2021** வரை |
|---|---|
| கேள்விதொடர்பானமுதற் கூட்டம் | **29.06.2021**அன்றுமு.ப 10.30 |
| கேள்வி மூடுதல்/திறத்தல் | **28.07.2021**அன்றுமு.ப 10.30 |

| கேள்விஅடையாள இல | வேலைவிபரம் | குறைந்தபட்சம் எதிர்பார்க்கப்பட்ட மொத்தவருவாய் (மில்லியன்) | வாடகைக்கான காலம் | மீளளிக்கப்படாத தொகை | கேள்விப் பிணைவிபரம். | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| Min.Edu/Lease/Solar/ jaffna/2021-1 | யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சூரிய கலங்களினூடாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கூரைத்தளங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் | 382.75 | 20 வருடங்கள் | 20,000.00 | நான்கு மில்லியன் | 19.01.2022 **வரை** |
| Min.Edu/Lease/Solar/ Kilinochchi/2021-1 | கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சூரிய கலங்களினூடாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கூரைத்தளங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் | 382.75 | 20 வருடங்கள் | 20,000.00 | நான்கு மில்லியன் | 19.01.2022 **வரை** |
| Min.Edu/Lease/Solar/ Mannar/2021-1 | மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சூரிய கலங்களினூடாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கூரைத்தளங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் | 382.75 | 20 வருடங்கள் | 20,000.00 | நான்கு மில்லியன் | 19.01.2022 **வரை** |
| Min.Edu/Lease/Solar/ Mullaitivu/2021-1 | முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சூரிய கலங்களினூடாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கூரைத்தளங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் | 382.75 | 20 வருடங்கள் | 20,000.00 | நான்கு மில்லியன் | 19.01.2022 **வரை** |
| Min.Edu/Lease/Solar/ Vavuniya/2021-1 | வவுனியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சூரிய கலங்களினூடாக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு கூரைத்தளங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் | 382.75 | 20 வருடங்கள் | 20,000.00 | நான்கு மில்லியன் | 19.01.2022 **வரை** |

பிரதமசெயலாளர்,வடமாகாணம்
தலைவர்
ஆளுநர் பெறுகைக்குழு.